இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 26-11-2025

# உழவர்க்கும் உணவுக்கும் துரோகம்!

உழவர்க்கு மட்டுமல்ல; மக்கள் உண்ணும் உணவுக்கும் சேர்த்து துரோகம் இழைத்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

நெல் கொள்முதலில் ஈரப்பதம் தளர்வு தொடர்பான தமிழ்நாட்டின் கோரிக்கையை நிராகரித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. கனமழை காரணமாக ஈரப்பதம் அதிகமாகியுள்ள நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டின் குரல் பிரதமர் மோடியின் காதுகளுக்குக் கேட்கவில்லை. சில நாட்களுக்கு முன்புதான் தமிழ்நாட்டுக்கு வந்தார் பிரதமர் மோடி. உழவர்களை உச்சிமுகர்ந்து பேசினார் பிரதமர். வேளாண்மையை வானளவுக்கு புகழ்ந்தார் பிரதமர். கோவையில் இருந்து டெல்லி சென்றதும் உழவர்கள் தலையில் அவரே மண்ணைப் போட்டுவிட்டார். வேளாண்மையின் வளர்ச்சியை அவரே தடுக்கப் பார்க்கிறார்.

**தமிழ்நாட்டில் குறுவை பருவத்தில் அதிக நெல்உற்பத்தி நடைபெற்றுள்ளது. இதனால் கொள்முதலில் சாதனை படைத்துள்ளது தமிழ்நாடு அரசு. மழை அதிகமாக பெய்து வருவதால் நெல்லின் ஈரப்பதம் அதிகமாகி உள்ளது. விவசாயிகளின் நலன் கருதி நெல் கொள்முதலுக்கான ஈரப்பத அளவை 17 விழுக்காட்டில் இருந்து 22 விழுக்காடாக உயர்த்தி விரைந்து ஆணை வழங்கிட வேண்டும் என்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் ஒன்றை அனுப்பி இருந்தார்கள்.**

அதில் தமிழ்நாட்டின் உணவு உற்பத்தி சாதனைகள் அனைத்தையும் முதலமைச்சர் அவர்கள் பட்டியல் போட்டுச் சொல்லி இருந்தார்கள்.

கடந்த ஆண்டு நெல் கொள்முதல் 4.83 லட்சம் மெட்ரிக் டன். இந்த ஆண்டு 14.11 லட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இது நெல் கொள்முதலின் மிகப்பெரிய சாதனை ஆகும். இந்த நிலையில் கொள்முதல் இலக்கை ஒன்றிய உணவு மற்றும் பொது விநியோகத்துறை குறைத்துள்ளது. கொள்முதல் செய்யப்படும் மொத்த நெல் அளவுக்கு ஏற்ப இதனை உயர்த்த வேண்டும் என்று முதலமைச்சர் கோரிக்கை வைத்துள்ளார்.

**காவிரி டெல்டா பகுதி மற்றும் பிறமாவட்டங்களில் பெய்துவரும் வடகிழக்குப் பருவமழையைக் கருத்தில் கொண்டு, நெல் கொள்முதலுக்கான ஈரப்பதம் அளவை 17 இல் இருந்து 22 விழுக்காடாக உயர்த்த வேண்டும் என்றும் முதலமைச்சர் கோரி இருந்தார். ஆனால் அதனை ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒப்புக் கொள்ளவில்லை. ஒன்றிய அரசில் இருந்து இதுவரை மூன்று குழுக்கள் டெல்டா மாவட்டங்களுக்கு வந்து பார்வையிட்டார்கள். அதன் பிறகும் ஒன்றிய அரசின் முடிவில் மாற்றம் இல்லை.**

ஈரப்பத அளவு தளர்வு உத்தரவு கிடைக்காவிட்டால் வேளாண் மக்கள் வெகுவாக பாதிக்கப்படுவார்கள். இதனை எல்லாம் சிந்திக்கும் மனநிலையில் பிரதமரும் இல்லை, ஒன்றிய அரசும் இல்லை என்பதையே அவர்களது செயல்பாடுகள் காட்டுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அக்டோபர் 19 ஆம் தேதியன்று பிரதமருக்கு கடிதம் அனுப்பினார். ஒன்றிய அரசின் கடிதம் நவம்பர் 17 வந்துள்ளது. முதலமைச்சர் எழுதிய கடிதத்துக்கு ஒரு மாதம் கழித்து பதில் அனுப்பி இருக்கிறது ஒன்றிய அரசு. ஒரு மாதம் கழித்து ஈரப்பத கோரிக்கைக்கு அனுமதி இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். ஈரப்பதம் அதிகமானதற்குக் காரணம், வேளாண் மக்களோ, தமிழ்நாடு அரசோ அல்ல. இயற்கையின் சூழல் அப்படி அமைந்து விட்டது. தென் மேற்கு பருவமழை முடிந்து, வடகிழக்குப் பருவமழை தொடங்கி பெய்து வருகிறது. இதனால் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருக்கிறது.

இதனைத்தான் விவசாய சங்கங்களும் சொல்கின்றன. **“ஒன்றிய அரசின் அதிகாரிகள் தமிழ்நாட்டின் பல இடங்களில் ஆய்வு செய்தார்கள். உடனடியாக ஈரப்பதம் விலக்களிப்பதற்கான அறிக்கை தரப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அதனை ஒன்றிய அரசு செய்யவில்லை. மழையால் பயிர்கள் மோசமாக பாதிக்கப்பட்டு இழப்பை எதிர் நோக்கியுள்ள விவசாயிகளுக்கு குறைந்த பட்சம் ஈரப்பதம் விலக்கைக் கூட அளிக்க மறுப்பது கண்டிக்கத்தக்கது. பிரதமர் கோவைக்கு வந்து, நான் விவசாயிகளின் பாதுகாவலன் என்று பேசிச் சென்றது ஏமாற்றும் செயல்”** என்று விவசாய சங்கங்கள் கொந்தளித்துள்ளன.

கன மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்குக் கோரப்பட்ட நிவாரணமும் அளிக்காமல், ஈரப்பத அளவையும் அதிகரிக்காமல் தமிழ்நாட்டின் டெல்டா விவசாயிகளை வஞ்சித்து வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், தமிழ்நாட்டின் கோரிக்கைகளை உடனடியாக மறுபரிசீலனை செய்து வேளாண் பெருங்குடி மக்களுக்கு ஒன்றிய அரசு நன்மை செய்திட வேண்டும் என வலியுறுத்தியும் தஞ்சாவூரிலும் திருவாரூரிலும் ‘மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி’ சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது. கோவையில் முழங்கிவிட்டு, டெல்லி சென்றுள்ள பிரதமரின் செவிகளில் இக்குரல்கள் விழுமா?

“விவசாயிகளிடையே பிரதமர் உரையாற்றிய ஈரம் காய்வதற்குள் அடுத்த துரோகம்” என்று இதனைத்தான் சொல்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

**எதற்கெடுத்தாலும் தமிழ்நாடு போராடுகிறது என்று குற்றம் சாட்டுகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. அதன் அமைச்சர்கள் அதைத் தான் தி.மு.க. மீது குற்றச்சாட்டாக வைக்கிறார்கள். அனைத்துக்கும் போராட்டம் நடத்தும் சூழலில்தான் தமிழ்நாட்டை ஒன்றிய பா.ஜ.க. அரசு வைத்துள்ளது என்பது தான் முழு உண்மை ஆகும்.**

## சென்னை – மதுரையில் ஆடவர் ஹாக்கி ஜூனியர் உலகக் கோப்பை போட்டி

# வீரர்களை பொதுமக்கள் - ஹாக்கி ரசிகர்கள் உற்சாகப்படுத்த வேண்டும்!

## இராதா கிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் முன்னேற்பாடு பணிகளை பார்வையிட்டபின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, நவ. 26-**

**ஆடவர் ஹாக்கி ஜீனியர் உலக கோப்பை போட்டிகளை சென்னை மற்றும் மதுரையில் மைதானத்தில் நேரில் பார்வையிட்டு வீரர்களை உற்சாகப் படுத்த வேண்டும் - பொதுமக்கள், விளையாட்டு வீரர்கள், ஹாக்கி ரசிகர்களுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா இணைந்து நடத்தும் 14-ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக்கோப்பைப் போட்டி, தமிழ்நாட்டில், சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம் மற்றும் மதுரையில் அமைந்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ஹாக்கி விளையாட்டரங்கம் ஆகிய இரு இடங்களிலும் 28.11.2025 முதல் 10.12.2025 வரை சிறப்பாக நடைபெற உள்ளது.

இதனையொட்டி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.11.2025) சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டு பணிகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மைதானத்தில் பார்வையாளர்கள் அமர்வதற்கும், போட்டியில் விளையாட உள்ள பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கான வசதிகள், மின் விளக்கு வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து அலுவலர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் உள்ள டாக்டர் கலைஞர் பார்வையாளர் மாடத்தில் இருந்து வெளிநாட்டு அணியினர் பயிற்சி ஆட்டம் மேற்கொள்வதை பார்வையிட்டு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து அலுவலர்கள் மற்றும் ஹாக்கி இந்தியா நிர்வாகிகளுடன் கலந்தாலோசனை மேற்கொண்டார்.

பின்னர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு :-

இராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அதை மேற்பார்வையிடுவதற்காகதான் வந்திருக்கின்றேன். அனைத்து விதமான பாதுகாப்பு வசதி, உணவு வசதி, போக்குவரத்து வசதி, தங்கும் வசதி இது போன்று அனைத்து வசதிகளும் செய்யப்பட்டிருக்கிறது.

வருகின்ற 28ஆம் தேதி சென்னை மற்றும் மதுரையில் போட்டிகள் தொடங்க இருக்கின்றது. மதுரையில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்கனவே அங்கே பத்திரிக்கையாளர் சந்திப்பு நடத்தி டிக்கெட் குறித்து விளக்கி இருக்கிறார். டிக்கெட்டுகளுக்கு நல்ல டிமாண்ட் இருக்கிறது. பொதுமக்களிடமும், விளையாட்டு வீரர்கள், ஹாக்கி ரசிகர்களிடமும் கேட்பதெல்லாம், இந்த உலக கோப்பை ஜீனியர் ஹாக்கி பற்றி நீங்கள் நிறைய பேரிடம் சொல்லுங்கள். போட்டிகளை நேரடியாக வந்து பாருங்கள். இந்த போட்டியை உற்சாகப்படுத்துங்கள்.



ஹாக்கி விளையாட்டிற்கு எப்போதுமே, தென்தமிழகத்திலும் சரி, சென்னையிலும் சரி தமிழ்நாட்டிலிருந்து நிறைய ஒலிம்பிக் வீரர்கள் வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த போட்டி புது உற்சாகத்தையும், உத்வேகத்தையும் கொடுக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு ஹாக்கி ஆசிய கோப்பை போட்டிகள் நடக்கும் போது ஒவ்வொரு போட்டிக்கும் இங்கு இருக்கக்கூடிய தமிழ்நாடு விளையாட்டு மேம்பாடு ஆணையத்தின் (SDAT) விடுதி மாணவர்கள் அத்தனைபேரையும் இங்கு அழைத்து வந்து, அவர்களுக்கெல்லாம் இந்த போட்டியை நேரில் பார்ப்பதற்கான, இன்னும் சொல்ல வேண்டும் என்றால், அந்த வீரர்களுடன் பேசுவதற்கான வாய்ப்புகள் எல்லாம் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது.

இந்த முறையும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாடு ஆணையத்தின் (SDAT) விடுதி விளையாட்டு வீரர்கள் அனைவருக்கும் அனைத்து போட்டிகளையும் இலவசமாக கட்டணமில்லாமல் பார்க்கும் வசதியோடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

SDAT ஹாக்கி விளையாட்டு வீரர்கள் அனைவரும் வந்து பார்க்கலாம். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாடு ஆணையத்தின் விடுதியில் இருக்கின்ற மற்ற விளையாட்டு வீரர்களும் வந்து இந்த போட்டிகளை பார்ப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கிறது.

### மிகப்பெரிய போட்டிகள் நடத்தப்படும்!

மிகப்பெரிய போட்டிகள் நடத்தப்படும் போது எல்லா மாநிலங்களுக்கும் கோப்பை அனுப்பப்படும். பல்வேறு மாநிலங்களுக்கும் உலகக் கோப்பை பயணம் மேற்கொள்ளப்பட்டது. கடந்த 10 நாட்களுக்கு முன்னர் டெல்லியில் நடைபெற்ற ஹாக்கி இந்தியா நூற்றாண்டு விழாவின்போதும் மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் கோப்பையை அறிமுகம் செய்தார்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஹாக்கி உலகக்கோப்பை பயணம் மேற்கொள்ளப்படுகின்றது என்று தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, இந்திய ஹாக்கி சங்க பொருளாளர் சேகர் ஜெ.மனோகரன் உள்பட அரசு அலுவலர்கள், ஹாக்கி விளையாட்டு வீரர்கள் ரசிகர்கள் கலந்து கொண்டனர்.

# கலைஞர் தொலைக்காட்சி நிருபர் மீது தாக்குதல்!

## சீமானுக்கு புதுச்சேரி தி.மு.க. கண்டனம்!

*புதுச்சேரி, நவ. 26-*

*எஸ்.ஐ.ஆர். குறித்து கேள்வி எழுப்பிய கலைஞர் தொலைக்காட்சி நிருபர் மீது தாக்குதல் நடத்திய சீமானுக்கு புதுச்சேரி மாநில திமுக தமது கண்டனத்தை தெரிவித்துள்ளது.*

*இது தொடர்பாக திமுக மாநில அமைப்பாளர் இரா.சிவா எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் கூறியிருப்பதாவது: -*

*அரசியல் கட்சியின் தலைவர்களுக்கு பெருந்தன்மையும், முதிர்ச்சியும் பொறுமையும் தேவை. பொது விவாதங்களில் பொதுமக்களும், செய்தியாளர்களும் அவர்களிடம் வைக்கும் கேள்விகளுக்கு நிதானத்துடனும், மரியாதையுடனும் பதிலளிக்க வேண்டும். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்றவர்கள் பத்திரிகையாளர்களின் எவ்விதக் கேள்விகளுக்கும் கோபமின்றி பதிலளித்து அவர்களின் உறவைப் பேணி வந்தனர். அதே வழியில் தான் கழகத் தலைவர் தளபதி அவர்களும் பத்திரிக்கையாளர்களை எதிர்கொள்கிறார்.*

*ஆனால் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் போன்ற அரசியல்வாதிகள் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு முறையாக பதில் கூறாமல் அவர்கள் எந்த பத்திரிகை, எந்த ஊடகம் என்று விசாரித்து மிரட்டுவதும், பொதுவெளியில் அவர்களை ஒருமையில் பேசுவதும் தனது தற்குறி பரிவாரங்களுடன் அவர்களை அவமரியாதை செய்வதையும் தொடர்கதையாக வைத்துள்ளார். இதுபோன்ற அநாகரிகச் செயலில் சீமான் தொடர்ந்து ஈடுபடுவதை தமிழ் மக்கள் நன்கு அறிவர்.*

*பத்திரிகையாளர்கள் கேட்கும் கேள்விகளுக்கு முறையாக பதிலளிக்காமல் அவர்களை அவமரியாதை செய்வது இவர்களின் வக்கிர புத்தியை காட்டுகிறது. ஒரு சாதாரண மனிதனுக்கு இருக்கும் கண்ணியம் கூட இவருக்கு இருப்பதில்லை.*

*இன்று புதுச்சேரி வில்லியனூர் தனியார் திருமண நிலையத்தில் நடந்த ஒரு செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சீமான், எஸ்.ஐ.ஆர். பற்றி கேள்வி எழுப்பிய கலைஞர் தொலைக்காட்சி நிருபர் ராஜீ என்பவரை அவர் எந்த தொலைக் காட்சி என்று கேட்டு உன்னையெல்லாம் எவன் கேள்வி கேட்கச் சொன்னது. உனக்கெல்லாம் என்ன யோக்கியதை இருக்கிறது என்று ஒருமையில் தரக்குறைவான வார்த்தையில் திட்டி அவரை கேள்வி கேட்கக் கூடாது என்று மிரட்டி இருக்கிறார். அத்துடன் தன்னுடன் வந்தவர்களை ஏவி தொலைக் காட்சி நிருபரை நெட்டித் தள்ளி தாக்கச் செய்துள்ளார். இது மிக கேவலமான அத்துமீறல் என்பதுடன் ஜனநாயகத்தை கேள்விக் கூத்தாக்கும் செயலாகும்.*

*செய்தியாளர்களுக்கு துணையாக யாரும் இல்லை என்ற எண்ணத்தில் தனது ஆட்களை வைத்து அவர்களை தாக்குவது காட்டுமிராண்டித் தனமாகும். ஆனால் எங்கள் கழகம் அப்படி எங்களை வளர்க்கவில்லை. சமூக நீதி வழியில் நாங்கள் வீறுநடை போடுகிறோம்.*

*கலைஞர் தொலைக் காட்சியுடன் அரசியல் ரீதியாக சீமான் மோதட்டும். நாங்கள் சந்திக்க தயாராக இருக்கிறோம். அதைவிடுத்து அப்பாவி செய்தியாளரிடம் மோதுவது கீழ்த்தரமான செயலாகும். இதுகுறித்து புதுச்சேரி பத்திரிகையாளர் சங்கத்தினர் வில்லியனூர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். காவல்துறை உரிய நடவடிக்கையை பாகுபாடின்றி எடுக்க வேண்டும்.*

*இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.*

# தமிழ் படித்த கூட்டம் பெருமிதம் பெறுகிறது!



நேற்று நடந்த நிகழ்வில்
நெகிழ்ந்து போனது நெஞ்சு

ஈரோடு தமிழன்பனின்
இறுதிச் சடங்கில் வழங்கப்பட்ட
காவல்துறை மரியாதை கண்டு
கலங்கி அடங்கியது கண்

பத்மஸ்ரீ இல்லை;
பல்கலைக்கழகத்
துணைவேந்தர் இல்லை;
அரசாட்சியின்
அதிகாரத்தில் இருந்ததில்லை

ஆனாலும்
தமிழோடு வாழ்ந்த
ஒரு புலவனுக்கு
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்
தந்த மரியாதை
இலக்கிய உலகத்தின்
ஆறாத கண்ணீருக்கு
ஆறுதல் ஆயிற்று

அந்த நெகிழ்ச்சி அடங்குவதற்குள்
அவரோடு பேச ஆசைப்பட்டேன்

பேசினேன்:

“இலக்கியவாதிகளின் சார்பில்
நன்றி என்றேன்;
ஒரு கவிஞனை
கர்வத்தோடும் கௌரவத்தோடும்
அனுப்பி வைத்தீர்கள்” என்றேன்

அவரும் நெகிழ்ந்து போனார்

முரசு கட்டிலில்
உறங்கிய புலவனுக்கு
வெண்சாமரம் வீசிய
வேந்தனின் மரபும்,
தமிழின் வாழ்நாள்
பெருகட்டும் என்று
தமிழ்க் கவிக்குக் கனிகொடுத்த
அரசனின் கனிவும்,
கவிஞர்களுக்கு உயரம்சேர்த்த
கலைஞரின் பரிவும்
தளபதி ஆட்சியில் தொடர்வதுகண்டு
தமிழ்படித்த கூட்டம்
பெருமிதம் பெறுகிறது

அவ்வை நடராசனுக்கு
அரசு மரியாதை
நான் கேட்டேன்; வழங்கினார்

ஈரோடு தமிழன்பனுக்குக்
கேட்கவில்லை;
அவரே வழங்கியிருக்கிறார்

தொடரட்டும்
மாண்புகளும் மரபுகளும்!



கவிப்பேரரசு
**வைரமுத்து**